கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௭.] விக்கிரமஹ ஆவணிமீ [பகுதி-௧௦.
Vol. 37. August—September 1940. No. 10.

கம்பராமாயணசாரம்.

[௪௦௨-ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்திரசித்தின் சோர்வு.

இலக்குமணன் எய்த ஈரைம்பது பாணங்கள், *இதயத்துள்ளே புதைவுற்றபோது, உள்ளமும் †உதிரமும் ‡சோர, இந்திரசித்து தன் வில்லைத் தாரகமாக ஊன்றிச் சாய்ந்து சோர்வுதீருமளவும் சும்மா நின்றான். அப்போது, அநுமான், அவன் தேரை உதைத்துருட்டினான். அவன் வேறொரு தேரேறி, அநுமான் தோளில் ஐம்பது அம்புகள் அழுந்த எய்தான். அந்தத் தேரும் அதற்குப்பின் ஒன்றின்பின் ஒன்றாக அவன் ஏறிய வேறு தேர்களுமாக, நூறு தேர்களை இலக்குமணன், நூறு பாணங்களெய்து பாழ்படச்செய்தான். அதைக் கண்ட தேவர்கள், அதிசயமும் ஆநந்தமும் அடைந்து, ஆசிகூறி ஆரவாரித்தார்கள்; பூமாரி பொழிந்தார்கள்; வெற்றிக்களிப்புமிகுந்து மேலாடை வீசினார்கள்.

இந்திரசித்தின்தோழர் இலக்குமணனை எதிர்த்தல்.

இந்திரசித்தோடு ஒத்த உணவும் உடையும் மற்றைய போக சாதனங்களுமுடைய அவனுடைய தோழரான வீரர்கள், பேரிகை முழக்கம்போலப் பேரோசையுண்டாகப் பேசுபவர்கள், (பிரபஞ்ச

* இதயம் - நெஞ்சு. † உதிரம் - இரத்தம். ‡ சோர - (1) தளர. (2) வடிய.

மண்டபத்திலே, பூமியாகிய தளவரிசையிலே பாதமும், ஆகாய மாகிய முகட்டிலே உச்சியும், பொருந்தத் தூண்கள் நிறுத்தினாற் போல) மண்தொட்டு விண்மட்டும் வளர்ந்த பேருடல் படைத்தவர் கள், பல ஆயிரவர்கள், இரத*கசதுரகாரூடராய் வீர ஆரவாரஞ் செய்துவந்து, இலக்குமணனை எதிர்த்தார்கள்.

அவர்கள் ஆரவாரித்த ஓசையும் அம்புகளேயும் மற்றைய ஆயுதங்களேயும் செலுத்திய ஓசையும் ஆகாயமெங்கும் பரவின. ஏறிய நூறுதேர்களும் இழந்துநின்ற இந்திரசித்து, வேறு தேர் வர ஏறிச் சரமாரி பொழிந்தான். அவன் எய்த அம்புகளெல்லா வற்றையும் ஒற்றையம்பினால் இலக்குமணன் விலக்கினான். அன்றி, அந்த ஏகபாணத்தினால், இந்திரசித்துக்குத் துணையாக வந்து சூழ்ந்துநின்ற தோழர்களான சூரர்கள் எய்தனவும் எறிந்தனவும் எற்றினவுமான எண்ணிறந்த ஆயுதங்கள் அறுபட்டுப் பொடியாய் உதிரவும், அவர்களுடைய அளவிறந்த தலைகள் தரைமேலுருண்டு மலைபோற் குவியவும் செய்தான். வேறு பாணங்களால் இந்திர சித்து மேனிமுழுதும் மறையச்செய்தான்.

அநுமான் ஆற்றல்.

தன் தோள்மேலுள்ள இலக்குமணன் இவ்வாறு செய்தபோது அநுமான், இராக்கதர்களைக் காலால் மிதிப்பான், உதைப்பான்; வாலாற் சுற்றி வீசுவான்; கைகளால் நெட்டித்தள்ளுவான், எட்ட எறிவான்; அஞ்சும்படி பார்த்து அதட்டுவான்; இரதகசதுரகபதாதி களைப் பூவும் தளிரும்போல இலேசாக எடுத்து எங்குந் தூவுவானாகிப் போர்புரிந்தான்.

மூர்ச்சித்த வானரர் தேர்ச்சியுற்றுப் போரிற் கலத்தல்.

அவ்வாறு, அநுமான், அரக்கரை அதஞ்செய்யும்போது, மூர்ச்சையுற்றுக் கிடந்த வானரர், தேர்ச்சியுற்று, எழுந்துவந்து இலக்குமணனை அடைந்தார்கள். அடைந்தவர்கள், நூறும் ஆயிரமு மாக, மரங்களேயும் மலைகளேயும் எறியச் சிதையுண்ட தேர்கள், போர்க்களத்திலே கிடந்தவை, கம்மாளர்வேலைத்தலத்திலே காணப் படும் முற்றுப்பெறாத தேர்களைப் போன்றன.

* கசம் - யானை. துரகம் - குதிரை. ஆரூடர் - ஏறினவர்.

அங்கதன் இந்திரசித்தை வெல்லுதல்.

அங்கதன், ஒரு பெருமரத்தைப் பிடுங்கி, 'இது உன் உயிரை உண்டிடும். தடுக்கவல்லையேல், தடுப்பாயாக' என்று கூறி எறிந்தான். அம்மரம், அவனால் தடுக்கப்படாமல், அவன் தேரைச் சிதைத்துச் சென்றது. அதுகண்ட தேவர்கள், 'அங்கதன், தன் தந்தை (வாலியின்) தந்தை (இந்திரன்) இந்திரசித்தினால் தோல்வியடைந்த அவமானத்தை அகற்றினனென்று' கூறிக் களிப்புக்கூத்தாடினார்கள். தேரழிந்தவன், வேறு தேரேறிச் சீறி, 'உயிர்தப்பிப் பிழைக்க ஓடாதே. நில்' என்று சொல்லி அங்கதன்மேல் அம்புகளெய்தான்.

வேறு வானரவீரர் வருதலும் பொருதலும்.

அங்கதனுக்குத் துணையாக மற்றைய வானரவீரர்கள் வந்து, போர்புரிதற்கு இந்திரசித்தை வளைந்துநின்று, மரங்களையும் மலைகளையும் அரக்கர்தலைகளையும், அவன்மீது, அவன் அம்புகளினும் அதிக வேகமுடையனவாக, வீசியெறிந்தார்கள். அப்போது, இலக்குமணன், எண்ணிறந்த அம்புகளை எய்து அளவற்ற அரக்கர்கள் ஆவிநீங்கச்செய்தான். தனது நால்வகைச்சேனையும் நாசமானதை, இந்திரசித்து, மனத்துட்கொண்டு, வருத்தமுற்று, நெருப்புப்போலச் சீறினன். அப்போது, அவன், (தன் தேர்ச் சக்கரக்காவலாளரான தூமிராட்சன், மாபாரிசுவனென்ற) இருவர்கள் பக்கத்துநின்றவர்களைப் பார்த்து, 'துணையாக வேறொருவில்லாளருமில்லாமல், இந்த வில்வீரன் (இலக்குமணன்), நமது நாற்பதுவெள்ளஞ் சேனையும் நாசமுறச்செய்தவாறு என்னே!' என்று இலக்குமணனது அசகாய சூரத்தன்மையை ('கூட்டொருவரையும் வேண்டாக் *கொற்ற'த்தை) வியந்து பாராட்டினன். அந்த அரக்கர், 'நீயும் நாற்பதுவெள்ளஞ்சேனையை நாசமாக்கினய். நீங்களிருவிரும் ஒருவரையொருவர் ஒத்துளீர்' என்றார்கள்.

---

* கொற்றம் - வீரம்.

இந்திரசித்தும் இலக்குமணனும் இரண்டாம்முறை எதிர்த்துப் பொருதல்.

இலக்குமணனும் இந்திரசித்தும், எதிரெதிராகநின்று, இரண்டாமுறை பொருவாராயினர். இலக்குமணன், ஆயிரம் ஆயிரமாக அம்புகளெய்தான். இந்திரசித்து அவ்வம்புகள் எய்யப்பட்டவுடன் அவைகளைத் தன்னம்புகளெய்து தூளாக்கினான். அன்றியும், ஆறும் எழும் நூறும் ஆயிரமுமாக அம்புகளெய்து, மூர்ச்சை தெளிந்து போர்த்தொழிலில்மூண்ட வானரவீரரை மறுபடியும் உணர்வுநீங்கச்செய்து மண்ணில் விழுத்தினான். இவ்வாறு, சுக்கிரீவாதியர் சோர்ந்துவிழக்கண்ட இலக்குமணன், அவர்களைச் சோர்வுறச்செய்த இந்திரசித்து சோர்வுறும்படி, மூங்கிற்காட்டை அழிக்கும் தீப்போலப் பகைவர்கூட்டத்தையழிக்கும் பாணங்களை மிகுதியாக எய்தான். அதனால், இந்திரசித்து இளைப்புற்றபோது, ஒரு மரத்தின் இருகிளைகள்போல, அவனுக்கு இருபக்கத்தும் இருந்த தூமிராட்சன் மாபாரிசுவனென்ற இருவரும் போர்தொடங்க, இலக்குமணன் இராக்கதசேனை அழியும்படி அம்புகளெய்யலானான். இரதங்களும் யானைகளும் பரிகளும் பதாதிகளும் பட்டன. மேற்கூறிய தேர்வீரர் இருவரே திரமாக நிலைத்துநின்றார்கள். மற்றெல்லா இராக்கதரும் மாண்டனர். உயிரோடிருந்த இராக்கதர் ஓடிப்போயினர்.

இலக்குமணன், அம்பெய்து, இந்திரசித்தின் கவசத்தை வெட்டிவீழ்த்தினான். கவசமற்று அவசமுற்ற அவன் அறிவு திரும்புமுன் நாமே இப்போரை முடித்திடுவோமென்று மேற்கூறிய இரதவீரர் இருவரும் அநுமான்மீதும் இலக்குமணன் மார்புதோள்கள்மேலும் வாளிதூவி யெதிர்த்தார்கள். இலக்குமணன், அவர்கள் தேரையும் வில்லையும் சிதைத்துத் தேர்ப்பாகனையும் குதிரைகளையும் கொன்றான். வில்லிழந்த அவர்கள், கதாயுதத்தைக் கைக்கொண்டு, கடிதுசென்று, அநுமானை அடித்தார்கள். அவன், தன்னை அடித்த தண்டுகளிரண்டையும் பிடித்துப் பிடுங்கிக்கொண்டான். அவர்கள் ஆயுதமற்ற அந்நிலையில் செய்யக்கூடிய தின்னதென்று தெரியாது திகைத்துத் தமக்கு உண்டிகொடுத்த தலைவ

னுக்கு உதவிசெய்யாமல், தம்முயிர்க்கே உதவிசெய்வாராயினர் (போர்செய்யாமல் ஓடிவிட்டார்களென்றபடி). அப்போது, முன், இந்திரசித்தினால் மூர்ச்சையுற்ற வானரத்தலைவர்கள், தேர்ச்சிபெற்றெழுந்துவந்து, தானுற்ற மூர்ச்சை தவிர்ந்துகொண்டிருந்த இந்திரசித்தின்மேல் இடிகள்போன்ற எண்ணிறந்த மலைகளை ஏக காலத்தில் எறிந்தார்கள். அவன் அவைகளைச் சின்னபின்னஞ் செய்தான்.

இரவு வரவு.

திருமால் பரம்பொருளென்றுணராதார் சிந்தைபோலத் திசைகளெல்லாம் இருண்டன.

இந்திரசித்தை விரைவிற் கொல்லும்படி விபீடணன் இலக்குமணனுக்கு யோசனைகூறுதல்.

'கால்நாழிகைக்குள் இந்திரசித்தைக் கொல்லவேண்டும்' அதன்பின் அந்தகாரம் வந்துவிடும். அரக்கருக்கநுகூலமான அந்தகாரம் வந்ததானால், அவன் வெற்றிபெற்றிடுவான்' என்று விபீடணன், இலக்குமணனுக்கு எச்சரிக்கைசெய்தான்.]

சூரியாத்தமனம்.

124 மரங்களு மலையு[1] மேந்தி[2] மழையென வழங்கி வந்து
நெருங்கினர் நெருந்த மாகண்[3] டொருதனி நெஞ்சும் வில்லும்
சரங்களும் துணையாய் நின்ற நிசாசரன் றனிமை நோக்கி
இரங்கின னென்ன மேல்பாற் குன்றுபுக் கிரவி[4] சென்றான்.[5]

கொண்டுகூட்டு: (சுக்கிரீவாதியர்,) மரங்களும் மலையும் ஏந்திவந்து (அவைகளை) மழையென வழங்கி நெருங்கினர். நெருங்குமா(று) கண்டு ஒரு தனிநெஞ்சும் வில்லும் சரங்களும் துணையாய்நின்ற நிசாசரன் தனிமை நோக்கி இரங்கினனென்ன, இரவி, மேல்பாற்குன்றுபுக்குச் சென்றான்.

பொருள்: (சுக்கிரீவன், அங்கதன், நீலன், சாம்பன், மயிந்தன், சதவலி, பனசன் முதலிய பல வானரப்படைத்தலைவர்கள்) மரங்களையும் மலைகளையும் ஏந்திவந்து அவைகளை மழைபோலச் சொரிந்துகொண்டு (இந்திரசித்தின் அருகில்) நெருங்கினார்கள்.

(அவர்கள் அப்படி) நெருங்குதலைக் கண்டு (அஞ்சாமல்) தன்னந் தனியாய்த் தன் மனமும் வில்லும் அம்புமேயன்றி, வேறு துணை யாதுமில்லானாய்(ப் பின்வாங்காது) நின்ற இந்திரசித்தின் தனிமை யைக் கண்டு, இரக்கங்கொண்டவன்போலச் சூரியன் மேற்கேயுள்ள (அத்தமன) கிரியை அடைந்து (மறைந்து அப்பாற்) போனான்.

நெருங்குமா(று) - நெருங்கும்விதம். ஒருதனி - தன்னந்தனி. சரம் - அம்பு. நிசாசரன், - இரவில் திரிவோனென்ற பொருளுடையது; இராக்கத னைக்குறித்தது. புக்கு - புகுந்து - அடைந்து. இரவி - சூரியன்.

சரங்களும் என்பதன்பின் தொக்குநின்ற ஏகாரத்தைத் தூக்கிப் பொருள்கூறப்பட்டது. எதிரிகள் பலராக, இந்திரசித்து ஒருவனாக இருப்பதைக் கண்டு, சூரியன் இரக்கங்கொண்டு, 'இருள் வந்தால், போர்நிகழாது, இவன் தப்பிக்கொள்வான். இருள்வருதற்குத் தடையாயிராமல், நாம் அத்தமித்திடுவோம்' என்று கருதினான்போல, அத்தமித்தான் என்பார், 'நிசாசரன் தனிமைநோக்கி, இரங்கினனென்ன, மேல்பாற் குன்றுபுக் கிரவி சென்றான்' என்றார்.

பாடபேதம்: [1] கல்லும். [2] அம்பும். [3] நெருங்கக்கண்டும். [4] அருக்கன். [5] நின்றான்.

இந்திரசித்து அந்தரம் உற்றிடல்.

[தன்னைநெருங்கிய மிகப் பலரான படைத்தலைவர்மீது மழை மாரிபோலச் சரமாரி சொரிந்துகொண்டிருந்த இந்திரசித்தின்தேரை இலக்குமணன் சிதைத்து வீழ்த்தினான். அவன், 'எதிரிகளை நாக பாசத்தால் கட்டுவேனானால், அதனோடு அவர்கள் கீழேவிழுந்து கிடந்து வருந்திச் சாவாரேயல்லாமல், சீவந்தராய்ச் செயித்து விட்டோமென்று திரும்பிப்போகார்' என்று(ம், இனி இங்கிருந்தால், இலக்குமணன் அம்புக்கிரையாய்விடுவேனென்றும்) கருதிக் கண்மூடி விழிப்பதற்குள்ளே, அழிந்த தேர் விழுந்திடுமுன்னே, மிகுவிரைவாக வில்லோடு விண்ணிற்சென்றான். அவன் போர்க் களத்தினின்று போர்புரியும் எண்ணத்தை மாற்றி, வேறெண்ணங் கொண்டு, விண்ணிற்சென்றது, யாதாய்முடியுமோவென் றஞ்சித் தேவர்கள் சிதறியோடினார்கள்.

இந்திரசித்து வானத்திற்சென்று மறைதல்.

இந்திரசித்து, இருளிலே, மேகத்துக்குமேலேசென்று, ('என்னை இருளும் மேகமும் மறைப்பது போதாது; இலக்குமணன் அக்கினியத்திரத்தால் வெளிச்சம் உண்டுபண்ணிக் கண்டுபிடித்திடுவான். அவ்வாறுசெய்யாதபடி, கண்ணிற்காணக்கூடாத நுண்ணுருக்கொள்வேனாக' என்று கருதித்) தான் முன்செய்த தவம் தருமம் மந்திரசெபம் இவைகளின் பலம், பிரமன் முதலியோரிடம் பெற்ற வரபலம், இயல்பாக மாயம்வல்ல இராக்கதசென்மபலம் ஆகிய ஐவகைப்பலங்களினாலும் அணுவினும் நுணுகிய சிற்றுருவடைந்தான். எய்யப்பட்டார் மும்மூர்த்திகளானாலும், அவர்களையும் இறுகக்கட்டித் தரையில்வீழ்த்தினாலன்றி மீளாத நாகபாசத்தைக் கையிலெடுத்தான்.

இந்திரசித்து தோற்றோடினானென்று வானரர் வெற்றிமுழக்கஞ்செய்தல்.

அவன், போர்புரியமாட்டாமல், தோற்றோடிப்போனானென்றெண்ணி, வானரவீரர்கள், வெற்றிமுழக்கம் செய்தார்கள். இலக்குமணனும், அவன் தோற்றோடினானென்றே நினைத்துச் சிரித்தான். எல்லாரும், அவன் மாயையை அறியாராய்ப் போர்புரிதலை நிறுத்தினார்கள். விளையப்போவதை ஒருசிறிதும் உணராராய், இலக்குமணன், அநுமான்தோளினின்றிறங்கி, வில்லை அங்கதன்கையிற் கொடுத்துவிட்டுத் தன்மேனியில் தைத்திருந்த சரங்களைப் பிடுங்கியெறிந்து இளைப்பாறத்தொடங்கினான்.

இந்திரசித்து நாகபாசத்தைப் பிரயோகித்தல்.

இந்திரசித்து, நாகபாசத்தை அபிமந்திரித்துப் பிரயோகித்தான். அது, (நான்குநேர்திசைகளும் நான்குமூலைத்திசைகளுமான பக்கத்திசைகளெட்டும் ஆகாசம் பாதாளமென்றமேல் கீழ்த் திசைகள் இரண்டுமாகப்) பத்துத்திக்குகளிலும் இருளை ஓட்டிக்கொண்டுசென்று, வயிரமலைகள்போன்ற இலக்குமணன் இரண்டு தோள்களையும் வருந்தும்படி வளைந்து கட்டியது. உலகமெல்லாம் ஒருங்கு திரண்டு எதிர்த்தாலும் கலக்கமடையாத இலக்குமணன்,

தனக்கு நேர்ந்தது, இந்திரசித்தின் மாயச்செயலாமென்று அறியானாய், செய்வது இன்னதென்று தெரியானாய், ('போர்க்களத்துக்கு எவனேனும் வந்து அம்பெய்தானோ' என்று) முதலிற் பூமியைப் பார்த்து (அங்கொருவரையும் காணாமையால், 'ஒருவேளை வானத்தி லிருந்து, போர்செய்யக்கூடும்' என்று) ஆகாயத்தைப் பார்த்தனன். அநுமான், 'இந்த மாயஞ்செய்த கள்வனை வேகமாக விண்ணிற் கிளம்பித் தேடிப்பிடிப்பேன்' என்று சினந்தபோது, வாலி வாலினாற் கட்டப்பட்ட இராவணன்போல, நாகபாசத்தாற் கட்டுண்டான். மற்றையோரும் கட்டுண்டார்கள்.

எல்லாரும் (அந்தக் கட்டை அகற்றமுயல்வாராய், மலைகள் (மேலெழுந்தாற்) போல எழுவார்கள். கீழே விழுவார்கள். தரையிற் புரள்வார்கள். தலைகளைத் தூக்கி ஆகாயத்தைநோக்கி அழ லெழப் பார்ப்பார்கள். வாலாற் பூமியை அடிப்பார்கள். வாயை மடிப்பார்கள். இலக்குமணனை நோக்கி ('எமக்கு நேர்ந்த விபத்து எம் பெருமானுக்கும் நேரலாயிற்றே' என்று) மனங்கொதிப்பார்கள்.*

அவர்கள், விபீடணனைநோக்கி, இதற்குப் பரிகாரமுண்டோ? வென்று வினவுவார்கள்; நாகபாசம் தாங்கள் அறியாமல் தங்களைக் கட்டுதற்குச் சகாயமாயிருந்த இருளை வெகுள்வார்கள்; இந்த ஆபத்தை யார் தீர்ப்பார்கள்? தீர்க்கவல்ல அநுமான் இதற்குத் தப்பிப்பிழைத்தானோ? என்பார். இராமன் இந்த நிலையில் தம்பி யைக் காணச் சகிப்பனோ? என்பார். அவர்கள் பட்டபாட்டை மேன்மேலும் பகர்வதாற் பயன் யாது? அவர்களெல்லாரும் கடுங் காற்றினால் கலக்குண்ட மேகங்கள்போல, நிலைகுலைந்து நிலத்திலே சாய்ந்து விழுந்தார்கள். அம்பு தைத்த புண்களினின்று பெருகி ஆறுபோல, உதிரவெள்ளம் ஓடலுற்றது.

---

* மலையென எழுவர் வீழ்வர் மண்ணிடைப் புரள்வர் வானில்
தலைகளை எடுத்து நோக்கித் தழல்எழ விழிப்பர் தாவி
அலைகிளர் வாலால் பாரில் அடிப்பர்வாய் மடிப்பர் ஆண்மைச்
சிலையவற் கிளைய கோவை நோக்குவர் உள்ளம் தீவர்.

அலை - அலைகின்ற. கிளர் - விளங்குகின்ற. சிலையவன் - வில்லுடைய வன் (இராமன்). இளையகோ - இலக்குமணன்.

அநுமனும் சுக்கிரீவனும் அங்கதனும் அடைந்த நிலை.

அநுமான், தன் உடம்பில் ஆயிரங்கோடி அம்புகள் தாக்கியது பற்றிச் சற்றும் சலித்தானில்லை; இலக்குமணனுக்கு உற்றதை உன்னி உடம்பு நடுங்கினான். சுக்கிரீவன், தோட்டில் முள்நிறைந்த கழற்காய்போல, அம்புகள் தங்கிய உடம்பும், கோபத்தீக்கொளுந்தும் உள்ளமும் (அந்தத் தீ மேலெழுந்து எரிந்தாற்போல) எரியும் கண்களும் உடையவனானான். மற்றைய வீரரெல்லாம் மண்ணில் விழுந்துகிடப்பாராக, அங்கதன், அம்புகள் நூறும் ஆயிரமுமாக உடம்புமுழுதும் நுழைந்தும் இரத்தம் ஆறுபோல வழிந்தும் தளர்ந்திடாது நிமிர்ந்திருந்தான்.

இலக்குமணன் நிலைமை.

இலக்குமணன், (நாகராசனான ஆதிசேடனது அவதாரமான) தான், (தன்னைக் கட்டிவருத்தும்) நாகபாசத்தை நீக்குதற்குத் தனக்கு வலிமையுண்டென்பதறிந்திருந்தும், (எடுத்த மனிதப் பிறவியின் இயற்கையினால்) அந்தப் பாசம் தன்னை வருத்துதலைப் பொறுக்கமாட்டாது வருந்தினான். அவன், (மலநோயென்னும்) பாசத்தை நீக்கும் வல்லமையடைந்த அறிவாளர், அவ்வல்லமை தமக்கிருந்தும் (முந்திய கருமபலன் முழுதும் அநுபவித்துத் தீருமளவும்) அப்பாசத்தால் வருந்துவாரை ஒத்தான்.

இந்திரசித்து, இராவணனை அடைந்து, தன் வெற்றியை அறிவித்துத் தன்மாளிகைக் கேகுதல்.

இந்திரசித்து, இலக்குமணனம்புகளால் ஏற்பட்ட உடல் வருத்தமும், 'வானரசைனியத்தை நாசமுறச் செய்திட்டேன். அன்றி, அதிகாயனைக் கொன்ற இலக்குமணனை அதஞ்செய்தாலன்றித் திரும்பேனென்று செய்த சபதத்தை* நிறைவேற்றிவிட்டேன்' என்ற மனமகிழ்ச்சியும் உடையவனாய், 'மனிதன்

---

* இப்படலம் கக-ஆம் பாட்டில்,

'வெங்கண்ணெடு வானரத் தானையை வீற்றுவீற்றாய்ப்
பங்கம்உற நூறி இலக்குவனைப் படேனேல்'

என வந்தது காண்க.

வாழ்க்கை ஒழிந்தது, வானர சைனியம் அழிந்தது' என்று இரு பக்கமும் மங்கலவாழ்த்து முழங்க, தேவலோகமாதர் தீபமேந்திச் செல்ல, (நாகலோக முதலிய) வேறு லோக மெல்லியலார் பல்லாண்டிசைக்க, அரக்கமடந்தையர் அறுகிட்டு ஆசிகூற, இலக்குமணன் கையம்பு பாய்ந்த தோள்களில் மாதர்கள்கண்ணம்பு பாயச் சென்று இராவணன் அரண்மனையை அடைந்து, அவனைக் கண்டு, அன்று போர்க்களத்தில் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் தெளிவாகத் தெரிவித்து, 'நீ துன்பம் நீங்குவாயாக, நான் இன்றைப் போரினால் ஏற்பட்ட தேகசிரமத்தைச் சீக்கிரம் தீர்த்தபின் வந்து மேல்நடத்த வேண்டியவைகளை விளம்புவேன்' என்று கூறித் தன் மாளிகைக்கு ஏகினான்.

வீடணன்விசனம்.

வீடணன், மிக்க விசனமடைந்து, செய்யத்தக்கதின்னதென்று தெரியாறாய், மத்தினாற் கடையப்பட்ட தயிர்போல மனமுடைந்து, 'எல்லாரையும் கொன்ற இந்தக்கொடியோன் என்னைக் கொன்றானில்லை. யான் (இயல்பாக) இறந்தேனுமில்லை.' என்று கூறித் துயரந்தாங்காறய்ச் சோர்ந்துவிழுந்தான். விழுந்தவன், தன்மனத்துள்ளே, 'இளையபெருமாளை நாகபாசம் கட்டக்கண்டு அவன்பால் நேசபாசமுடையாரெல்லாரும் சகிக்கமாட்டாராய்த் தாமும் அவனைப் போலத் தளர்ந்து விழுந்துகிடக்கின்றார்கள்!* இதுவன்றோ, அன்புடைமை! அவன் அன்பர்களுள் நான் ஒருவனே தனித்துச் சாவாதிருக்கின்றேன். நானும் அன்பனெனத்தக்கேனோ? உலகத்தார் என்னைப்பற்றி என்ன என்ன எண்ணுவார்களோ? இளையபெருமாளைக்கூட்டிக்கொண்டுபோய்த் தன்மகனால் (மகன் முறையினனான இந்திரசித்தினால்) தோல்வியடையச்செய்து, கொலையுண்ணவுஞ்செய்தானென்றெண்ணுவார்களோ? இந்தக்கேடுகளெல்லாம் செய்வானென்று தன்னைச் சந்தேகியாமல் நல்லோனென்று

---

* இலக்குமணன்போலவே தாமும் நாகபாசத்தால் வீழ்ந்துகிடப்பவர்களை, அவன்பால் உள்ள நேசத்தால் அநுதாபமுற்று, அதுகாரணமாக வீழ்ந்துகிடப்பவராக வீடணன் கூறியது எதனாலென்றால், தன்னைமட்டும் நாகபாசம் கட்டாதுபோயிற்றேயென்ற வெறுப்புமிகுதியா லென்பது.

நம்பும்படி வஞ்சகமாக முன்னே நடந்துகொண்டானென்றெண்ணு வார்களோ?' என்றெல்லாம் எண்ணிக் கண்ணும் மனமும் உயிரும் கரைந்துருக வருந்தினன்.]

125 ஒத்தலைத்[1] தொக்க வீடி யுய்யினு[2] முய்ந்தே[3] னுள்ளம்
கைத்தலை நெல்லி யொப்பக்[4] காட்டிலேன் கழிந்து மில்லேன்[5]
அத்தலைக் கல்லேன் யானீண் டபயமென் றடைந்து நின்ற
இத்தலைக் கல்லே னல்லே னிருதலைக் கொள்ளி யொப்பேன்.[6]

கொண்டுகூட்டு: 'யான், ஒத்து, அலைத்து, ஒக்க வீடி, உய்யின் உய்ந்து என் உள்ளம் கைத்தலைநெல்லிபோலக் காட்டிலேன். கழிந்துமில்லேன். அத்தலைக்கல்லேன். ஈண்டு அபயமென்று அடைந்துநின்ற இத்தலைக்கல் லேன். நல்லேன்! இருதலைக்கொள்ளி ஒப்பேன்.'

பொருள்: '(யான் இந்த வானரவீரர்கள்)போன்று (பகைவர் களைப் பொருது) வருந்தச்செய்து, (இவர்கள் பகைவரால்) இறந் தால் நானும், (இவர்களுடனே) இறந்து, (இவர்கள் பகைவர்களுக் குத் தப்பிப்)பிழைத்தால் நானும் பிழைத்து, நெல்லிக்கனி (உள்ளேயுள்ள விதையின் வரைகளை வெளியேயுள்ள வரைகளாற் காட்டுதல்)போல, என் உள்ளத்தின் (அன்புடைய) தன்மையை (எதிரிகளையெதிர்த்துப் பொருகின்ற செயலால்) காட்டினேனில்லை! இறந்தேனுமில்லை. (நான் வெறுத்து விலகிய) அந்தப்பக்கத்தா ரோடு சேரவும் ஆகாதவனாகினேன்; அபயமென்று (அடைக்கல மாக) அடைந்த இந்தப்பக்கத்தாரோடு சேரவும் ஆகாதவனாகி னேன். (இருபக்கத்தார்க்கும்) பொல்லாதவனானேன். (ஒருதலை யையும் அடையமுடியாத) இருதலைக்கொள்ளி (எறும்பு) போன் றேன்' (என்று புலம்பினான் விபீடணன்.)

ஒத்து - போன்று. அலைத்து - வருந்தச்செய்து. ஒக்க - சமமாக. வீடி - இறந்து. உய்யின் - பிழைத்தால். உய்யினும் என்பதில் உம்மை இசை நிறை. கைத்தலை நெல்லி - (அகங்)கையினிடத்து (உள்ள) நெல்லி(க்கனி). இதனைக் 'கரதலாமலகம்' என்பர் வடமொழிவாணர். 'கரதலம்' (-கைத் தலம்) 'ஆமலகம்' (-நெல்லி) என்ற சொற்கள் தீர்க்கசந்தியாகச்சேர்ந்து 'கரதலாமலகம்' என்பதாயிற்று. கழிதல் - சாதல். 'கழிந்தார்கள் (-இறந்த வர்கள்) வெண்டலை கண்டார்நெஞ் சுட்க' நாலடியார். 'அத்தலை' 'இத்தலை'

என்பவற்றுள், முறையே, அத்தலை அப்பக்கத்தாரை (இராவணன்பக்கத்தாரை)யும் இத்தலை இப்பக்கத்தாரை (இராமன்பக்கத்தாரை)யும் குறித்தன. நல்லேன், (பிறகுறிப்பால், மறுதலைப்பொருளாகிய) 'பொல்லேன்' என்ற பொருள் குறித்தது. 'அல்லேன் நல்லேன்' எனக் கொள்ளாது, 'அல்லேன் அல்லேன்' எனக்கொண்டு, திண்ணமாக அல்லேன் என்பது குறிக்க, 'அல்லேன் அல்லேன்' என இரட்டித்துக்கூறினான் எனலுமாம். 'இருதலைக்கொள்ளி' அடையடுத்த இடஆகுபெயராய், 'இருதலைக்கொள்ளியெறும்பை' (-இரு முனையிலும் தீயுள்ள கட்டையின் நடுவிலுள்ள எறும்பை) உணர்த்தியது.

பாடபேதம்: [1] அலைந்து. [2] உய்வினும். [3] உய்வித்து. [4] என்னக், தன்னிற். [5] கழிந்து மேலென். [6] சூலம் போல்வேன்.

அநலன் விபீடணனைத் தேற்றி இலக்குமணனுக்கு நேர்ந்ததை இராமனுக்குத் தெரிவித்தல்.

[விபீடணனோடுகூட, இலங்கையைவிட்டுவந்து, இராமனைச் சரணமடைந்த அவன்மந்திரி நால்வரில் ஒருவனான அநலன், 'இப்போது செய்யத்தக்க பரிகாரச்செயல்கள் பல இருக்கின்றன. அவற்றைச் செய்ய முயலாமல், அறிவில்லார்போல, நீ தளரலாமோ? வருந்தாதே' என்று கூறி விபீடணனைத் தேறச்செய்து, 'நீ இங்கே இரு. நான்போய் இராமபிரானிடம் நடந்ததைத் தெரிவிப்பேன்' என்று கூறிச் சென்று, இராமனை வணங்கி, இலக்குமணன் நிலைமையைத் தெரிவித்தான். இராமன் துன்பக்கடலுள் ஆழ்ந்தான்.]

இலக்குமணன்நிலைமையைத் தெரிந்த இராமன்மெய்ப்பாடு.

126 உரைத்திலனொன்றுந் தன்னை யுணர்ந்திலனுயிரு மோடக்
கரைத்திலன் கண்ணி னீரிற்[1] கண்டிலன் யாதுங் கண்ணால்
அரைத்திலனுலக[2] மெல்லா மங்கையாற் பொங்கிப் பொங்கி
இரைத்திலனுளனென் றெண்ண[3] விருந்தனன் விம்மி[4] யேங்கி.

கொண்டுகூட்டு: ஒன்றும் உரைத்திலன்; தன்னை உணர்ந்திலன்; கண்ணின் நீரில் உயிர் (கரைந்து) ஓடக் கரைத்திலன்; கண்ணால் யாதும் கண்டிலன்; அங்கையால் உலகமெல்லாம் அரைத்திலன்; (துக்கம்) பொங்கிப் பொங்கி இரைத்திலன்; விம்மி ஏங்கி உளன் என்று எண்ண இருந்தனன்.

பொருள்: (மிக்க துக்கமுற்றோர் உணர்விழந்து, திகைத்து, கண்ணீர்வடித்தல் கதறியழல் முதலியன செய்யா வென்றவாறு) இராமன், (தனக்குத் தம்பியிலேமையைத் தெரிவித்த அநலனுக்கு) ஒருவார்த்தையும் உரைத்தானில்லை; தன்னுணர்ச்சியற்றான்; கண்ணீரினால் உயிர் (கரைந்து) ஓடும்படி (அதனைக்) கரையச்செய்தானில்லை; (கண்கள் திறந்தபடியிருந்தும் அந்தக்) கண்களால் எதனையும் கண்டானில்லை; (தன் தம்பிக்கு வந்த விபத்தை உலகத்தார் தடுத்தார்களில்லையே யென்று கோபித்துத் தன்) கை (அம்பு)களால் உலகத்தாரையெல்லாம் அழித்தானில்லை. (மனத்தில் துக்கம்) அதிகமாகப் பொங்கி வாய்விட்டுக் கதறினானில்லை; (நெடுநேரம் பிரதிமைபோல இருந்து, உணர்ச்சி திரும்பியபோது அவன் உயிர்நீங்கினனோவென்று எண்ணிய அநலன், அவன்) விம்மியேங்கினதனால், (உயிரோடு) இருக்கின்றானென்றெண்ணும்படியிருந்தான்.

உரைப்பது, வார்த்தையேயாதலால், 'உரைத்திலனொன்றும்' என்பதில் 'ஒன்றும்' என்றது, 'ஒருவார்த்தையும்' என்ற பொருள் குறித்தது. 'உயிரும் ஓடக்கரைத்திலன் கண்ணினீரில்' என்பது, 'கண்ணின்நீரி(னா)ல், உயிர் (கரைந்து) ஓட (அதனை)க் கரைத்திலன்' என இயையும். உயிரும் என்பதில் உள்ள உம்மை, இசைநிறை. உலகம், இடஆகுபெயராய் உலகத்துள்ளாரை உணர்த்தியது. 'அங்கையால் அரைத்திலன்' என்பது, 'கையில் உள்ள அம்புகளால் அழித்தானில்லை' யென்ற பொருளைக் குறிப்பாகப் புலப்படச்செய்தது. 'பொங்கிப்பொங்கி' என்பதன்முன் 'துக்கம்' என்பது தொக்குநின்றது, 'பொங்கிப்பொங்கி' என்ற அடுக்கு, 'மிகப் பொங்கி' என்ற பொருள்குறித்தது. இரைத்தல் - ஒலித்தல்; இங்கே, சத்தமிட்டழுதலை உணர்த்தியது. ஏங்கி யென்ற வினையெச்சம் காரணப்பொருளுடையதாய் 'ஏங்கினதனால்' என்ற பொருள்குறித்தது.

'உளனென்றெண்ணி' என்ற பாடத்துக்கு, ('உணர்வு திரும்பி வந்தபோது, செத்தொழிந்தேனில்லையே இன்னும் உயிரோடு) இருக்கின்றேனே யென்று (வருத்தத்தோடு) நினைத்து' எனப் பொருள்கொள்க.

பாடபேதம்: [1] விம்மி விம்மிக், கண்ணினீரைக். [2] உம்மகை. [3] எண்ணி. [4] உள்ளம்.

இராமன் இலக்குமணனைக்கண்டு இரங்கல்.

[இவ்வாறு துன்புழந்துகொண்டு சும்மாவிருத்தலாற் பயனில்லையென்று கருதி, இராமன் சுருக்காக எழுந்து, வேகமாகப் போர்க்களத்துக்குப் போனான். அப்போது, கருங்கடல், அந்தக்கடலின் நீரையுண்ட கார்மேகம் இவைகள்போன்ற கரியபொருள்களெல்லாவற்றினாலுமான போர்வைபோல, மிக்க இருட்டு, யாதொரு பொருளையும் காணமுடியாதபடி மறைத்துக்கொண்டிருந்தது. இராமன், அக்கினியத்திரத்தைப் பிரயோகித்து, அந்தகாரத்தை அகற்ற, போர்க்களம் நடுப்பகலிற் காணப்படுவதுபோல் நன்கு விளங்கியது. அவன், அங்கே, பிணமலைகளோடும், இரத்த ஆறுகளோடும், நிணச்சேறுகளோடும், (கீழே விழுந்துகிடந்த) ஆயுதக்காடுகளோடும், அதிவேகமாக அரைக்கணத்திலே சென்று தம்பியைக் கண்டு, மேல்விழுந்து, மார்பழுந்தத் தழுவிக் கண்டோர் இனி இவன் பிழையானென்னும்படி பெருமூச்செறிந்து, கதறியழுது கண்ணீர்மாரி சொரிந்தான். அப்போது, அவன், பெருங்காற்றடிக்க, இடித்து, மழைபொழியும் கார்மேகம் சிவந்த பாலசூரியன் மீது விழுந்துகிடந்தாற்போன்றான்* அவன், துக்கமேலீட்டால் உயிர் உருகி, உணர்வு சோர்ந்து, செய்வதின்னதென்று தெரியாமல், இலக்குமணா! இலக்குமணா! என்று பலமுறை பரிதாபமாகக் கூப்பிட்டு, தன் கையை அவன் வாயிலும் மூக்கிலும் வைத்து, மூச்சு இருக்கிறதோவென்று பார்த்து, ஐயா! பிழைப்பாயோ! என்று அலறிக் கால்களைத் தட்வித் தொடையைத் தட்டி, இமைகளைப் பிரித்துப் பார்த்துக் கண்ணொளியும், மார்பைத் தொட்டு இதயத்துடிப்பும் இருப்பதைத் தெரிந்து, மகிழ்ந்து, அவனைத் தூக்கியெடுத்துத் தன் மார்பிற்சார்த்தி மறுபடியும் பூமியிற் கிடத்தினான்.

இராமன்கோபம்.

பின்பு, துக்கம் சிறிது குறைந்த அளவிலே, கோபமுண்டாகச் சுற்றும் பார்த்து, (திருட்டுத்தனமாக இருட்டுக்குள் மறைந்து

* இங்கே, இராமன் கரியநிறமும் இலக்குமணன் செம்பொன்னிறமுமுடையவரென்பது நினைவுகூரற்பாலது.

அம்பெய்த) கள்வன் (இந்திரசித்து காணப்படாமையால்) போய் விட்டானோ? என்பான். (தம்பியைக் காக்கப் பயன்படாத இதனால் என்னபிரயோசனமென்று) தன் வில்லைச் சினந்துபார்ப்பான்; (தன் வில்லால் தடுக்கப்படாமல் தீங்கிழைத்த) நாகபாசத்தின்கட்டைக் கோபித்துநோக்குவான்; (அதனை எய்தற்குத் துணையாயிருந்த) இருட்டை வெகுண்டுபார்ப்பான்; (தம்பியைக் காவாது வானத்தி லிருந்து வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தீர்களேயென்று) வானத் தவரைச் சீறிநோக்குவான்; பூமியை அடியோடு பெயர்த்துவிடுவே னென்பான்; 'அறம்வெல்லும் பாவம்தோற்கும்' என்ற பெரியோர் கூற்றும் பிழைத்ததேயென்பான்; கீழேவீழ்ந்துகிடந்த வீரரை யெல்லாம் பார்ப்பான்; உற்றாரெல்லாரையும் ஒருங்கிழந்த என்னைப் போல எளிமையை யாரடைந்தார்! என்பான்.

இராம விபீடண சம்வாதம்.

இவ்வாறு புலம்பிய இராமன், எதிரேநின்ற விபீடணனை நோக்கி, 'இந்திரசித்துக்கும் இலக்குமணனுக்கும் போர்தொடங்கிய தென்று நீ சீக்கிரமாகவந்து தெரிவியாதுபோயினாய். தெரிவித் திருந்தால், இந்த நாகபாசத்தையும் இதனைத்தொடுத்தவன் கையோடு தலையையும் அறுத்தொழித்திருப்பேன். நீ என்னைக் கெடுத்திட்டாய்' என்றுகூற, 'இந்தப்போர்க்களத்துக்கு இந்திர சித்து வந்து எதிர்ப்பதை எதிர்பார்க்கவில்லை. அதிகாயனைக்கொன்ற இளையபெருமாள் இராவணன் வருவானென்றெண்ணியிருந்தான். நான் இந்திரசித்து தோற்பானென்று நம்பியிருந்தேன். இலக்கு மணன், இந்திரசித்தின் சேனைமுழுவதையும் அழித்து, அவன் பலத்தைத் தொலைத்து, அவன் செத்தானென்றெண்ணும்படி அவன் மார்பில் எண்ணிறந்த அம்புகளை எய்தான். தனியனாகப் பட்டுநின்ற அவன், தப்பிப்போனால், மாயம்செய்வானென்று இளையபெருமாளிடம் எச்சரிக்கைசெய்தேன். அவன் மாயஞ் செய்தற்கநுகூலமாக, இரவுவர, இருள் பரவியது. அவன் வானிற் சென்று மறைந்துநின்று நாகபாசத்தை வீசினான்' என்று கண்ணீர் சொரிந்துகொண்டு விபீடணன் கூறினான்.

இராமன், 'இந்த நாகாத்திரத்தை இந்திரசித்துக்குக் கொடுத்த தேவன் யாவன்? இதனினின்று தப்பிப்பிழைக்கும் உபாயம் யாது? செப்புவாய்' என, விபீடணன், 'இது, பிரமன்செய்த யாகத்திற் பிறந்தது. இதனைப் பிரமனிடம் பெற்ற சிவனைக்குறித்துத் தவஞ்செய்து இந்திரசித்து பெற்றான். அவன் இதனாலேதான், இந்திரனை பிறுகக்கட்டிச் சிறைப்படுத்தியதும். அநுமானையும் அவ்வாறுசெய்ததும்' என்றான். இராமன், 'இதைக்கொடுத்த தேவன்மேற்போர்செய்தலோ? இலங்கையைத் தாக்கி, அங்குள்ளாரெல்லாரையும் அதஞ்செய்தலோ? உலகத்தையே ஒழித்து யானும் ஒழிதலோ? எது செய்தற்கேற்றதென்று சொல்லு. வரமாக இந்த நாகபாசத்தை அளித்த தேவனே வந்து இதனை நீக்குவானானல், நன்று. அன்றெனில், ஓரம்பினால், திரிபுரத்தைச் சாம்பலாக எரித்த சிவன்போல, மூன்றுலகத்தையும் ஒருகடிகைப்போதிலே பொடியாகச்செய்திடுவேன். என் தம்பியே இறப்பானானல், எனக்குப் புகழினாலாம் நன்மை யாது? பழியினாலாம் தீமை யாது? தருமத்தாற் பெறும் ஆக்கம் யாது? (பாவத்தால் வரும் கேடு யாது?) ஒன்றுமின்று. (பழியும் புகழும் ஒன்றே. பாவமும் புண்ணியமும் ஒன்றே. ஆரார் எனக்கு நன்மைசெய்தாரென்பதை ஆராய்ந்தால், என்தம்பியினும் நண்பரினும் மண்ணிலுள்ளவரும் விண்ணிலுள்ளவரும் நல்லரல்லர், (ஆதலால், முன்னவர்கள் கொல்லப்பட்டதற்குப் பரிகாரமாக, பின்னவர்களைக் கொல்லுதலில், எனக்குத் திகைப்பில்லை.) ஆயினும், ஒருகொடியோன் குற்றஞ்செய்ய, உலகத்தாரையெல்லாம் ஒழித்தல் முறையன்று' என்றுகூறித் திரும்பவும் தம்பிதோள்களைக் கட்டியிருந்த பாசத்தைப் பலமுறை பார்த்து, இதனால் என்தம்பி இறப்பானானல், யானும் இறப்பேனென்றெண்ணினான்.

கருடன்வருகை.

விண்ணினின்று போர்க்களத்தைப் பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள், இராமனது துன்பம் எவ்வாறாய்முடியுமோ? (அது உலகத்தோடு முடியுமோ? அம்மட்டில் அமையாமல், அவனோடுமே முடியுமோ?) என்று நடுங்கினார்கள். அப்போது, அவர்கள் அருகே

நின்ற கருடன், எதற்கும் கலங்காத இராமன் மனங்கலங்கியதைக் கண்டு வருந்தி, கோடிகாதமளவும் பார்வை செல்லவல்ல கண்கள் நீர்பொழிய, இராமன் துன்பம் தீரவேண்டுமென்று எண்ணினான். எண்ணியவன், தன் ஒளியினால் உலகமெல்லாம் மூடியிருந்த இருள் ஒழிய, இமையாத் திசையானைகளின் கண்கள் கூசி மூட, சிறகுக் காற்றினால் மேருமலையும் நாகபாசமும் நிலைகுலைய, செம்மேனியும் வெண்கழுத்தும் ஏககாலத்தில் செவ்வெயிலையும் வெண்ணிலவையும் எங்கும் பரப்ப, மேருமலையைப் பருமையினும் நிறத்திலும் ஒத்த தன்சிரத்தில் அணிந்த கிரீடம், அந்த மேருமலையுச்சியை யடைந்த சூரியனினும் மும்மடங்கு ஒளிவீச, நெற்றியிலே பொற்பட்டம் பொலிய, மார்பிலே பொன்னரிமாலையும் பன்னிற ரத்தின மாலையும் பூமாலையும் துளவமாலையும் புரள, மின்னினால் அமைந்த குன்று ஒன்று விண்ணிலேசென்றாற்போலப் பறந்து, சூரியன் கிழக்குவிட்டுத் தெற்குதித்து, மேற்கே செல்லாமல் வடக்கே வந்தாற்போல (இலங்கையைநோக்கித் தெற்குமுகமாக நிற்கும் இராமனெதிரே) தலைமேல் உயர்த்திக்கூப்பியகையனாய்த் தொழுது கொண்டுவந்து, 'பிரமாதி தேவதேவரைப் படைத்த பெருந்தேவனே! (உனது புனித உருவத்தை மறைத்து மனிதவடிவத்தை எடுத்ததற்கேற்ப) நடிக்கின்றவனே! எல்லாருடைய துன்பங்களையும் நீக்கும் நீ, துன்புறுதல் என்னசெயலோ! (அது உனக்கு விளையாட்டாயினும், எங்களைத் துன்புறுத்துகின்றது. ஆதலால்,) எம்பெருமானே! வருந்தாதே, எல்லாம் உடையாய்! வருந்தாதே' என்றுகூறிப் பின்வருமாறு துதிப்பானானான்.

கருடனது இராமதோத்திரம்.

'இந்திராதிதேவர்களும் பிரமாதி தேவதேவர்களும் துதிக்கின்ற திருநாமம் (ஆயிரம்) உடையோனே! என்றும் இளைஞனாய் எக்காலத்தும் ஈரேழுலோகங்களையும் இனிதாண்டு தனி புரக்கும் தலைவனே! உன் அடியார் பிறராற் பெறலாகாத இன்பங்களையெல்லாம் அடைந்து முடிவில் நித்தியமான முத்தியின்பத்தை அடையச்

செய்யும் முதற்பெருந்தலைவனே! (இத்தன்மையான மகிமைகளை யுடைய நீ,) வருந்தித் தளரக்கடவையோ? இந்தப் பெருமாயத்தை யாரே அறிவர்?'

'எல்லா உயிர்களையும் பிரமனாய்ப் படைத்து விட்டுணுவாய்க் காத்து உருத்திரனாய் அழித்து எங்கும் (எள்ளில் எண்ணெய்போல) வியாபித்திருக்கின்ற இறைவனே! (மூவருக்கும் தேவருக்கும்) யாவருக்கும் வரங்கொடுக்கவல்லவனே! (வருணனை வழிபட்டு வழி வேண்டியதுபோல்) உன்னிடம் வரம்பெற்றவர்களை வணங்கி அவர்களிடம் வரம்பெறுபவனே! முற்றுணர்வுடைய நீ, அஃதில்லாத மானுடனாக வந்து, துன்பத்தினால் வருந்துகின்றாய்! (இப்படி ஆச்சரியமான செயலுடைய நீ) ஒருத்தன் இருக்கின்றாய்! இந்தப் பெருமாயத்தை யாரே அறிவார்?']

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

யவனர்வரலாறு.

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

[சஉசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

உரோமருடைய நீதிப்பிரமாணங்கள்.

உரோமர் பண்டுதொட்டுத் தம் பிரமாணங்களைச் செப்பேடுகளில் எழுதினர். பதின்மர் செய்த 12 ஏடுகள் அவற்றுள் சிறந்தவையெனவும் தனிக்கோலன் கத்திரயன் அவற்றைச் சிறிது திருத்தினானெனவும் அறிவாம். பிற்காலவேந்தர்கள் பிரமாணங்களுக்கு அடங்காது தாம் நினைந்தவாறு கொடுங்கோல்செலுத்தினரென்பது கூறவேண்டியதில்லை. உரோமருடையசட்டங்கள் சில நகைவிளைக்குந்தன்மையன. கணவனைப்பிரியும் பெண்கள் தீர்வுத்தொகையைக் கணவன்கையிற் கொடுத்து வீட்டினின்று நீங்கல்வேண்டும். கன்னத்திற் கையாலடித்து அடிமைக்குச் சுவாதீனம் அளித்தல் மரபு. வலக்கையை இறுகப்பற்றி நட்புக்கொண்டாடல் வழக்கம். நிலவுரிமைக்காக வழக்குரைப்போர், சான்றுகூறுவோரின் காதைத்தொட்டு எதிரியின்கழுத்தைப்பற்றிநின்று சுற்றத்தாரின் ஆதரவைக் கேட்டல்வேண்டும். தனிக்கோல்வேந்தன் அகஸ்தஸ் நகைவிளைக்கும் சிலவற்றைத் திருத்தினான்.

யஸ்தினியன் 2000 நூல்களை 50 நூல்களாகச் சுருக்கி எழுதினான். உரோமர்சட்டங்கள், குடியியல் பொருளியல் வினையியல் தீங்கியல் என நாலு இயல்களாகப் பிரிக்கப்பட்டன. தந்தை தன் வீட்டிற் செய்யும் வினையொன்றையும் ஒருவரும் குற்றமெனச் சொல்லமுடியாது. தந்தை தன் பிள்ளையையும் மனைவியையும் கொல்லலாம். நூமா என்னும் வேந்தன் இளமையில் தான் நற்பழக்கம் பழக்கலாம் என்னும் நியாயத்தைக் காட்டிப் பன்னீராட்டைப்பிராயத்துச் சிறுமிகளை மணஞ்செய்துகொள்ளலாமென விதித்தான். ஆடவன் மணமகளைக் காசு கொடுத்துப் பெறுதல் வழக்கம். பெற்றோருடைய அநுமதியுடன்தான் மணம் நிகழும்.

பதின்மர் முன்னிலையில் சமயக்கணக்கர் மணக்கிரியையாகத் தெய்வங்களுக்குப் பழங்களைப் படைத்தலுண்டு. மணமகளும் மணமகனும் ஒரு ஆட்டுத்தோலிலிருந்து அப்பம் உண்ணல் ஓர் கிரியை. கி. மு. 250-ல் மனைவியின் நிலங்களைக் கணவன் விற்றுச் செலவுசெய்யக்கூடாதெனப் பிரமாணம் விதிக்கப்பட்டது. இல்வாழ்க்கைக்குதவாதோர், நீடியகாலம் பிரிந்தொழுகுவோர், துறவு பூணுவோர் என்போரை விட்டுப் பிரிதற்கு மனைவிகள் பிரிவுப் பத்திரம்பெறலாம். எகிப்தியர் உடன்பிறந்தோரை மணஞ்செய்து கொள்ளலாம். எதீனியரின்வழக்கத்தின்படி மாமன் மருமகளை மணக்கலாம். உரோமருடைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் ஒருவன் எவ்வளவு காமக்கிழத்தியரையும் வைத்திருக்கலாம். ஒருவன் மரணத்தின்பின் அவன் சந்ததியார் அவனுடைய நிலம் பொருள்களுக்கு உரிமையுடையோராவர். ஒருவன் தன்னிலம் பொருளைத் தன் பிள்ளைகளுக்கு அளியாமல் பிறருக்குக் கொடுக்கலாம். கசையடி கொடுத்தலும் அடிமையாக்கலும் சிறந்த தண்டங்கள். மரணதண்டனை ஒன்பதுவகைக் குற்றங்களுக்கு விதிக்கப்பட்டது. அரசதுரோகத்திற்குத் தண்டம் சிலுவையில் அறைதல். கொலைப்பாவஞ்செய்தோர் நாயோடேனும் பாம்போடேனும் குரங்கோடேனும் பையொன்றினுள் இடப்பட்டு ஆற்றில் எறியப்படுவர். தீயிடுவோர் சவுக்கடிபெற்றுத் தீயிலிடப்படுவர். பொய்ச்சான்றுரைப்போர் வரையினின்றும் வீழ்த்தப்படுவர். கைக்கூலிபெறும் நீதிபதிகள் கொல்லப்படுவர். வசைப்பாட்டு எழுதுவோர் கம்பால் அடிக்கப்படுவர். பயிரழிப்போர் தண்டமிறுப்பர். மந்திரவாதிகள் தண்டிக்கப்படுவர். இரவில் களவுசெய்வோரைப் பிடிப்போர் கொல்லலாம். பிறர்மனைவிழைவோரைக் கையோடு பிடித்தால் கொல்லலாம். பெண்டிர் தாமே கற்பைக் காக்கவேண்டும். ஆடவர் காக்கவேண்டிய அவசியமில்லை. இளைஞரைக் காமுறுவோர் பெருந்தொகைக்காசு தண்டம் கொடுக்கவேண்டும். ஒருவன் பெண்தன்மையை அவாவின் பிரசைக்குரிய உரிமைகளை இழப்பன். பிறர்மனைவிழைவோரின்மீது இரங்கல் வழக்கம். பெண்மையை அவாவுதல் பெருங் குற்றமாக எண்ணப்பட்டது.

யஸ்தினியன் முப்பத்தெட்டியாண்டு செங்கோலோச்சியபின் இறந்தான். அவன்பின் அவன் மருகன் யஸ்தின் II அரசாண்டான்.

அவனுடைய காலத்தில் இலம்பாடியர் போ நதிச் சமபூமிகளில் குடியேறினர். யஸ்தின் இறந்தபின் ரைபிறியஸ் என்பவன் தலைமைப் பதவியைப் பெற்றான். யஸ்தினுடைய விதவை அரசியல்நடாத்தவும் அழகிய தடமார்பரோடு கூடிக் களிக்கவும் ஆசைப்பட்டாள். அனஸ்தாசியஸ் தலைவனாகியதைக் கேள்வியுற்ற அரசி பொங்கியெழுந்தாள். அவள் தலைவனைக் கொல்லும்படி ஒருவனை ஏவினாள். தலைவன் இதையறிந்தும் மன்னித்தான். தலைவன் தன் மரணகாலத்தில் தன் மகளையும் இராச்சியத்தையும் மோரிஸ்என்பவனுக்கு அளித்தான்.

கி. பி. 582-ல் பிராஞ்சிய பறங்கியர் தலைவன் அதாறிஸ் என்பவன் இலம்பாடியரிடம் நிலம்பெற்றான். அவனுக்குச் சர்மானிய அரசகுமாரியை மணம்பேசினர். அவன் காந்தருவவிவாகமே சிறந்ததென நினைந்து அரண்மனைபுகுந்து தன்காதலிக்குத் தன்னை அறிமுகப்படுத்தினன். சிறிதுகாலம் இக்களவொழுக்கம் நிகழ்ந்தபின் அவன் அவளை மணமுடித்துக்கொண்டான். இதுநிற்க. இக்காலத்தில் டைபர்நதி பெருக்கெடுத்து நோய்விளைத்தது. அதனுடன் உரோமாபுரியும் பூகம்பத்தால் இடருற்றது. அக்காலத்துக் கத்தோலிக்ககுரு கிறெக்கரி உரோமர்கோயில்களை இடித்தான். அவன் நூல்நிலையங்களையும் எரித்தான். இலிவியஸ் எழுதிய சரித்திரநூல்களில் சிலபாகங்கள் தீக்கு இரையாயின. அக்குரு கிறிஸ்துசமயத்தைப் பரப்புதற்கு உரோமாபுரியையே அழித்திருப்பான். கிறிஸ்து சமயகுரவர் போலும் பீற்றரும் உரோமாபுரியில் அடக்கஞ்செய்யப்பட்டனரென நம்பினனாதலின் உரோமாபுரத்தை அழியாதுவிட்டான்.

கி. பி. 579-ல் யஸ்தினியன் I பார்சியவேந்தன் நர்சிவானை வென்று உடன்படிக்கை எழுதினன். நர்சிவான்மகன் கர்மிஸ்திஸ் கொடுங்கோலோச்சினன். அவனுடைய படைத்தலைவன் பகிராம் துருக்கரைத் துரத்தியடித்தான். அவன் உரோமரோடு பொருது தோற்றானாகப் பார்சியவேந்தன் படைத்தலைவனுக்கு உபகாரமாக நூல்நூற்கும் ஊசியை அளித்தான். இச்செயல் படைத்தலைவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. இங்ஙனம் உள்நாட்டுக்

கலகம் தொடங்கிற்று. ஜனங்கள் வேந்தனைக் கொன்று அவனுடைய மகன் கஸ்றஸ் II என்பவனுக்கு முடிசூட்டினர். இதுநிற்க. ஆவார் என்னும் சாதியர் உரோமரோடு பொருதனர். அவாரைப் பிறிஸ்கஸ் என்னும் படைத்தலைவன் துரத்தினான். படைவீரர் மோரிஸ்வேந்தனை வெறுத்தனராதலின் அவனைப் பகைத்தனர். வேந்தன் மோரிஸ் அரசைத்துறந்தான். ஜனங்கள் படைவீரன் பாக்கஸ் என்பவனை வேந்தனாக்கினார்கள். அவனைக் கராக்கிளியனும் அவன்மருகன் கிறிஸ்பனும் பச்சைக்கட்சியாரின் உதவிபெற்றுத் துரத்தினர். அக்காலத்தில் பார்சியவேந்தன் கஸ்றஸ் II எருசெலம் நகரைப் பிடித்ததுமன்றி எகிப்தையும் பிடித்தான். அவன் தலைநகரில் 900 யானைகளும் 12,000 ஒட்டகங்களும் 3000 கன்னியருள்ளிட்ட 12000 அடிமைகளும் 6,000 கோவேறு கழுதைகளும் 6,000 மெய்காப்பாளரும் வைத்திருந்தான். அவன் தன்னுடைய மனைவி சிராவின் அழகில் மயங்கினான். அவள் சிற்றின்பத்தை அதிகம் விரும்பினளல்லளாதலின் துயருற்றான். உரோமர்வேந்தன் கராக்கிளியன் பார்சியருக்குத் திறைகொடுக்க உடன்பட்டான். ஆவாருடையவேந்தன் சாகன் பைசந்தியத்தின்மீது படையெடுத்தானாகக் கராக்கிளியன் ஓடித் தப்பினான். ஆவார்கள் 270,000 சனங்களைச் சிறையிட்டனர். ஆவாரை உரோமர் கி. பி. 626-ல் துரத்தினர். பார்சியர் பைசந்தியத்தைத் தாக்க, ரோமன் கத்தோலிக்கர் பார்சியநாடுபுகுந்து அக்கினிதேவனின் கோயில்களை இடித்தனர். கராக்கிளியன் துருக்கரிடம் துணைபெற்றுப் பார்சியரை வென்றான்.

கத்தோலிக்கர் மதம்.

யூதர் பண்டுதொட்டுப் பல அற்புதங்களைக் கண்டனராதலின், கிறிஸ்து செய்த அற்புதங்களில் ஆச்சரியப்படவில்லை. யூதரல்லாதார் கடவுள் மனிதவுடம்பில் புகுதல்கூடுமோவென ஐயுற்றுக் கிறிஸ்துமதத்தை நம்பவில்லை. கன்னி மேரியின்கதை நம்பத்தக்கதன்று என்றனர். கிறிஸ்தவருள் ஒருசாரார், பளிங்கினூடே ஆதித்தன்கதிர் தோய்வின்றிச்செல்லுமாறுபோலப் பரிசுத்த ஆவி மேரியினுடம்பிற் புகுந்ததாயினும், தூடக்குறவில்லையென வாதித்தனர். எகிப்திய கிறிஸ்தவர்கள் ஏசுகிறிஸ்து ஒரு மானிட

குமாரனெனவும், கடவுளின்குமாரன் ஒரு மனிதன்கூட்டில் அவதரித்தானெனவும் நம்பினர். அவர் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தகாலைக் கடவுள் உடம்பைத் துன்புறவிட்டுத் தான் பரலோகமடைந்தமையால் சர்வவல்லமைக்கு இழுக்கில்லையென வாதித்தனர். அப்பலிஞறிஸ் என்னும் குரு பேரறிவு மானிடயாக்கையிற் பொருந்தியதென்பதே கிறிஸ்துவின் அவதாரத்தின் கருத்து என மொழிந்தான். அக்கருத்தைக் கத்தோலிக்கர் தெளியாது மறுத்தனர். பூரணகுணங்களுள்ள கடவுள் பூரணமடைந்த மனிதவுடம்பிற் கூடுதல் கடவுளின் அநாதிக்கு இழுக்கில்லையென்று கொறிந்திய கிறிஸ்தவர் கூறினர். அலெச்சாந்திரியாநகரத்துக் கத்தோலிக்கர்குருமார் ஒறிஸ்திஸ் என்னும் தேசாதிபதியின்மீது கல்லெறிந்தனர். குடிகள் அம்மனியஸ் என்னும் குருவை உடனே கொன்றனர். கணிதவல்லோன் டையன் என்பவனுடைய மகளின் பெயர் கைப்பேசியா. அவள் யவனதத்துவநூல்களைக் கற்று வல்லளாயினள். பலர் அவளிடம் உபதேசங்கேட்டனர். பலர் அவளை மணக்கவிரும்பியபோதிலும், அவள் துறவறவாழ்க்கையையே விரும்பினள். சிறில் என்னும் கத்தோலிக்ககுரு தூண்டப் பீற்றர் என்பவன் கைப்பேசியாவை இரதத்தினின்றும் இழுத்து விழுத்தி முத்துச் சிப்பிகளால் கீறிக் கொன்றான். இவ்விழிந்த வொழுக்கம் கி. பி. 415-ல் நிகழ்ந்தது. சிரியாதேசத்துக் கத்தோலிக்ககுரு நஸ்ரோறியஸ் என்பவன், தேவகுமாரனாகிய கிறிஸ்துவுக்குத் தச்சன்மனைவியாகிய கன்னிமேரி தாயாகுதல் இயலாதெனவும் கன்னிமேரியை வணங்கக்கூடாதெனவும் நவின்றனன். இக்கொள்கை பரம்புமென அஞ்சி, சிறில் குருமார்சபையைக் கூட்டினன். நஸ்ரோறியஸ் சபைக்குச்செல்லுமுன் குருமார்கூட்டங்கூடி அவனுடையமதம் இழுக்குடையதெனத் தீர்த்தனர். வேந்தன் தியடோசியஸ் நஸ்ரோறியஸ் என்பவனின்கொள்கையே சரியெனச் சொன்னான். உடனே சிறில் நஸ்ரோறியஸ் என்பவனைக் கொல்வித்தான். கத்தோலிக்கர் ஆறியன்மதத்தையும் கண்டித்தனர். ஆறியன்மதத்தோர் பரிசுத்தஆவி கடவுள் குமாரன் என்னும் முப்பொருள் இல்லையென வாதித்தனர். இவ்வாதம் முடிவுபெறுமுன் விக்கிரகங்களை வணங்கலாமோ என்னும் வாதம் தொடங்கியது.

உரோமாபுரத்துக் கத்தோலிக்கர் விக்கிரக ஆராதனையை முதன் முதல் தொடங்கினர். கி. பி. 883-ல் கிறிஸ்துசமயம் தென்னிந்தியாவில் பரம்பிற்று. குரு தோமாஸ் சேரநாட்டில் கிறிஸ்துமதத்தைப் பரப்பினுன் என்ப. அவன் மேரியை வணங்கக்கூடாதெனவும் விக்கிரகவாராதனை பாவமெனவும் போதித்தான்

பிற்காலவேந்தர்.

கராக்கிளியஸ் தனது இல்லாள் யூடோசியா இறந்தவுடன் கத்தோலிக்ககுரு தடுக்கவும் தன்மருகி மாட்டினுவை மணந்தான். அவனுடைய முதல்மனைவிக்கு ஒரு மகன் (கன்ஸ்ரான்தையின் என்பவன்) பிறந்தான். இரண்டாவதுமனைவிக்குக் கராக்கிளியோனஸ் என்பவன் பிறந்தான். இவ்விருமைந்தர்க்கும் இளவரசுப்பதவியை நல்கியபின் கி. பி. 641ல் கராக்கிளியன் துஞ்சினுன். கன்ஸ்ரான்தையின் ஓராண்டு ஆளுமுன் இறந்தான். மாட்டினு அவனுக்கு நஞ்சூட்டினுளென அலராயிற்று. வீரரும் மேன்மக்களும் சீறியெழுந்து மாட்டினுவினது நாக்கை அறுத்தனர். கன்ரான்ஸ் II பன்னீராட்டைப்பிராயத்தினனுயினும் முடிசூட்டப்பெற்முன். அவன் கராக்கிளியனின் பேரப்பிள்ளையைக் கொல்வித்தான். பொதுஜனங்கள் அவனைப் பகைத்துக் கலகம்விளைத்தனர். அரசன் அஞ்சி, சிசிலித்தீவுக்கு ஓடினன். ஆங்கு ஒரு அடிமை அவன் குளிக்கும்பொழுது வெந்நீருற்றித் தலையில் அடித்துக் கொன்முன். கன்ஸ்ரான்ஸ் என்பவனுடைய மைந்தர் கன்ஸ்ரான்ரையின், கராக்கிளியஸ், ரைபீறியஸ் என்னும் மூவரும் தலைவராயினர். மூத்தோன் படைவீரரின்வேண்டுகோட்கிணங்கித் தம்பியர் இருவரையும் பதவியினின்றும் நீக்கினன். அவனுக்கு யஸ்தினியன் கராக்கிளியன் என இரண்டுமக்கள் உண்டு. யஸ்தினியன் வேந்தனுகியவுடன் கத்தோலிக்ககுரு ஒருவனையும் வித்திலன் ஒருவனையும் அமைச்சராக ஏற்படுத்தினன். கி. பி. 695ல் ஜனங்கள் யஸ்தினியனை உறுப்பழித்துக் கொன்றனர். ஜனங்கள் பிலிப்பிக்கஸ் என்பவனை வேந்தனெனத் தொழுதனர். கி. பி. 711ல் அவன் அரசபதவியைப் பெற்று உண்டு உறங்கினுன். கி. பி. 713ல் மேன்மக்கட்சபையார் அவனுடைய எழுத்தாளன் அனஸ்தாசியஸ் என்பவனுக்கு முடியை

அளித்தனர். கடற்படை விரோதித்தெழுந்து தியடோசியஸ் என்னும் வீரனுக்குச் செங்கிறப்போர்வையை அளித்தது. அனஸ்தாசியஸ் கி. பி. 716ல் தன் பதவியைத் துறந்தான். கி. பி. 718ல் லீயோ என்னும் கிழைத்தேசப்படைத்தலைவன் வேந்தன் தியடோசியனை விலக்கினான். கி. பி. 741ல் மூன்றாவது லீயோ அரசாண்டான். அவன் விக்கிரகங்களை இடித்து வீழ்த்தினன். அவனுடைய மகன் கன்ஸ்ரான்ரையின் V விக்கிரக ஆராதனையைக் கண்டித்தான். அவன் பெருங் கொலைப்பாதகன், மூக்கிறைச்சி சாப்பிடுதலில் ஆசையுடையவன், தன் அடிமைகளின்மூக்கைத் தானே வெட்டிச் சமைப்பிப்பானும். அவனுடைய மகன் லீயோவும் அவன் பேரன் ஆறுவது கன்ஸ்ரான்ரையினும் வேந்தராயினர். லீயோ தன் தம்பியரைவர் தலைமைப்பதவியை விழைந்தனரென எண்ணி அவர்களை மானபங்கப்படுத்தினன். லீயோவின்மகன் எதீனியமங்கையொருத்தியைக் காதலித்துத் தன் தாயோடு கலகப்பட்டுத் தாயை நாடுகடாத்தினான். சிறிதுகாலம் சென்றபின் அவன் தன் மனைவியைத் துறந்து வேறொருத்தியை இச்சித்தான். குருமாரும் படைவீரரும் அவனை விலக்கி அவனுடைய தாய் ஐறீனி என்பவளை அரசியாக்கினர். ஐறீனி தன்மகனின் கண்களைப் பிடுங்கும்படி பணித்தனள். மேன்மக்கள் அவளை வெறுத்து அவளுடைய தனாதிகாரிக்கு உத்தரீயத்தை அளித்தனர். தனாதிகாரி நிக்கபோரஸ் வேந்தனாகியவுடன் சரசினரோடு பொருதான். பின்னர் பல்கேரியரோடு பொருது மாண்டான். அவனுடைய மகனும் போரில் மடிந்தான். தனாதிகாரியினுடைய சகோதரி பிறக்கப்பியாவும் அவளுடைய கணவன் மைக்கேலும் அரசியலை நடாத்தினர். மைக்கேல் கோழையனாயினும், அவனுடைய மனைவியோ ஒரு வீரப்பெண். மைக்கல் தன்பதவியைத் துறந்து முப்பத்திரண்டு ஆண்டு மறைந்து வசித்தான். பின்பு லீயோ என்பவன் அரசனானான். அவன் தன் தோழனுக்குப் பதவிகள் அளித்தான். தோழன் திருப்தியடையாததைக் கண்டு அவனைத் தீயிலிடும்படி ஏவலாளரைப் பணித்தான். லீயோ கோயில்வழிபாடுசெய்யும்போது ஒருநாள் கொல்லப்பட்டான். மைக்கல் II தலைவனாயினன். அவன் ஒரு கொன்னையன். தோமாஸ் என்னும் வீரனொருவன்

படைதிரட்டி நகர்வாயிலில் பாசறையிட்டிருந்தான். மைக்கல் அவனைப் பிடிப்பித்துக் கை கால் குறைத்துக் கழுதையேற்றினான். மைக்கலின் மகன் தியோபிலியஸ் கி. பி. 829-ல் அரசனானான். அவன் அங்கையில் பொற்பழமேந்தி மெல்லியலாரை வரிசையாக நிற்கச்செய்து தலைவியொருத்தியைத் தெரிதற்கு விரும்பினன். ஐக்கேசியாவின் வதனம் அவன்மனத்தைக் கவர்ந்தது. அரசன் தன் காதலைக் கூறியகாலையிற் பெண்களே தீமைக்குக்காரணமெனச் சொல்லாடினன். அவள் பெண்களே நன்மைக்கும் காரணமென உரைத்தாள். அரசன் அவள் நாணிலள் என நினைத்து மடந்தை தியடோருவுக்குப் பொற்பழ மளித்தான். அவள் விக்கிரக ஆராதனையை ஏற்படுத்தினள். கணவன் இறந்தபின் தன் மகனுக்காக கி. பி. 845-ல் அரசியலை நடாத்தத்தொடங்கினள். அவளுடைய மகன்தான் மைக்கல் III. அவன் 18 வயசினன். நீலக்கட்சிச் சாதிகளைச் சார்ந்து அல்லும் பகலும் களித்தாடினான். விகடனொருவனைக் கத்தோலிக்க குருமாருக்குத் தலைவனாக்கினன். திருக்கோயில் புக்குக் கோயிற்பாத்திரங்களை எச்சிற்படுத்தினன். கத்தோலிக்கர் அவனை வெறுத்துக் கொன்றனர்.

லியோவின் ஆட்சிக்காலத்தில் பாதியமன்னன்குலத்தோன் ஒருவன் கிரேக்கபட்டினமாகிய கத்திரியனப்பிளில் குடியேறினன். அவன் குலத்தோர் வறுமைப்பட்டனர். அவர்களுள் பேசில் என்போனின் தந்தை ஒரு சிறு கமத்தை நடத்திவந்தனன். பேசில், வேந்தன் தியோபிலியனுடைய படையில் சேவித்திருந்தான். ஜனங்கள் மைக்கலைக் கொன்று பேசில் என்பவனை வேந்தனாக்கினார்கள். அவன் பொருளீட்டுதலிலும் பார்க்கக் காத்தலிலும் வகுத்தலிலும் வல்லுநனாயினன். அரசாங்கத்தோரின் வீண்செலவைக் கண்டித்து நீதிசெலுத்தினான். ஒருநாள் வேட்டையாடும்போது கலைமான் கோட்டில் அகப்பட்டு இறந்தான். அவன்மைந்தர் லியோவும் அலெச்சாந்தரும் ஆழிவேந்தராயினர். மக்கட்பேறு வேண்டுவோர் இரு மனைவியரை மணஞ்செய்துகொள்ளலாம். மூன்றுமனைவியரோடு வாழ்தல் வழக்கமில்லையாயினும் லியோ XI மூன்றுமனைவியரோடு வாழ்ந்தான். வாழ்ந்தும் மயக்குறுமக்களைப் பெற்றிலன். சூ என்னும் நங்கை ஒருத்தியைத் தன் காமக்கிழத்தியாக்கினான்,

அவள் ஒருமகனைப் பயந்தாள். உடனே காமக்கிழத்தியை அரசன் மனைவியாக்கினன். அதுமுதல் நான்குமனைவியரை மணக்கலா மென்பது பிரமாணமாயிற்று. லியோவின் தம்பி அலெச்சாந்தர் தூர்த்தரோடுகூடித் திரிந்தான். தன் மரணகாலத்தில் தோழ னொருவனை அரசனுக்குதற்குத் தமயனுடைய மகனை வித்திலனுக்க எண்ணினன். அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. சூவும் எழு அமைச்சரும் அரசியலை நடாத்தினர். அமைச்சர் தம்முட் பகைவ ராகிக் கலகப்பட்டனர். கி. பி. 919-ல் ரோமானஸ் லேக்கபீனஸ் கடற்படையோடு தலைநகரில் இறங்கி முடிசூட்டப்பெற்றான். அவ னுடைய மக்கள் அவனைத் தீவாந்தரத்திற்குத் துரத்தினராக, ஜனங்கள் அவர்களை விலக்கிச் சூவின்மகன் கன்ஸ்ரான்ரையினைப் பின்னரும் வேந்தனாக்கினர். அவன் தன் மகன் ரோமானுஸ் என்பவனுக்குக் கல்விகற்பிக்கவில்லை. ரோமானுஸ் உயர்ந்த உருவினன். அவன் பன்றிவேட்டையில் மிகவும் விருப்பமுடைய வன். அவன் அரசனாகியபின் அவனுடைய மனைவி தியபானு அவனை நஞ்சூட்டிக் கொன்றாள். அவனுக்கு மைந்தர் இருவர். ஒருவன் பேசில் II எனவும் ஒருவன் கன்ஸ்ரான்ரையின் IX என வும் பெயர்பூண்டு அரசாண்டனர். கணவன் இறந்தவுடன் தியபானு நிக்கபோரஸ்பக்கஸ் என்போனை மணந்தனள். அவன் சரசின ருடன் பொருதான். தன் தோழன் சிமிக்கிஸ் என்பவனை உத்தி யோகத்தில் அமைத்தான். சிமிக்கிஸ் தலைவியின்காதலர் பலருள் ஒருவனாகிய பக்கஸ் என்போனைக் கொன்று தலைவனானன். அவன் மரித்தபின் ரோமானுஸ் என்பவனுடைய புத்திரர் பேசில் என்பவ னும் கன்ஸ்ரான்ரைன் என்பவனும் வேந்தராயினர். பேசில் கி. பி. 1025-லும் கன்ஸ்ரான்ரையின் 1028-லும் இறந்தனர். கன்ஸ்ரான் ரையினுடைய மகள் சூ என்பவள் ரோமானுஸ் ஆர்க்கிரஸ் என்பவனை மணந்துகொண்டாள். உடனே அவனை மணந்திருந்த முதல் மனைவி கணவனைப் பிரிந்து கதலிக்கர் பள்ளியைச் சேர்ந்தாள். சூ என்பவள் மைக்கல் என்பவனைக்காமுற்று அவனைக்கொண்டு கி. பி. 1034-ல் தன் கணவனாகிய ரோமானனைக் கொல்வித்தாள்.

மைக்கல் IV தலைவனாயினன். அவன் வலிநோயால் இறந்தான். கி. பி. 1041-ல் அவன் மருகன் மைக்கல் V அரசனாயினன். அவன் தாயை வெறுத்தானாகச் சனங்கள் அவன் கண்ணை இடந்தனர். சூ என்பாள் பின்னரும் அரசியலை நடாத்தினாள். சூவினது தங்கை தியடோரா கதலிக்கர்பள்ளியைவிட்டுத் தமக்கைக்குத் துணையானாள். அவள் துறவியாதலின் விவாகஞ்செய்துகொள்ளவிரும்பவில்லை. அதையுணர்ந்த சூ என்பாள் தன் அறுபதாம்வயதில் விவாகஞ்செய்துகொண்டு ஒரு ஆண்குழந்தையைப் பெற்றாள். அம்மகவுதான் கன்ஸ்ரான்ரையின் X. அவன் தன் காமக்கிழத்திஸ்கலிறினாவை அரசியாக்கினான். அவனுக்குப்பின் அவனுடைய சிறியதாய் தியடாராவும் அவளுக்குப்பின் ஆறுவது மைக்கலும் ஆழியுருட்டினர்.

மனுவல் என்போனுக்கு இருமைந்தர் பிறந்தனர். அவர்கள் படைத்தலைவராயினர். கி.பி.1057-ல் மூத்தகுமாரன் ஐசாக்-கமனஸ் என்பவன் அரசனானான். அவன் தன் இராச்சியத்தைத் தன்மகளுக்கு அளியாமல் தன் தம்பி யோனுக்கு அளிக்கவும் அவன் மறுத்தான். அரசனுடைய தோழன் 'கன்ஸ்ரான்ரைபின் துக்காஸ்' என்பவன் தலைமைப்பதவியை ஏற்றான். அவன் தன் மனைவி யூடோசியாவிடம் தான் இறந்தபின் விவாகஞ்செய்துகொள்ளாதிருக்கும்படி கத்தோலிக்ககுருமுன்னிலையில் வாக்குறுதிகேட்டான். அவள் தன்கணவனைக்கொன்ற ரோமானுஸ் தியோசனிஸ் என்பவனை விவாகஞ்செய்துகொண்டாள். அவள் தான் அளித்த வாக்குறுதிப்பத்திரத்தைக் குருவின்வீட்டில் நுழைந்து களவாடினாள். இதுநிற்க. துருக்கர்வேந்தன், ரோமானுஸ் என்பவனைச் சிறைப்படுத்தினன். யூடோசியா துறவுபூண்டு கதலிக்பள்ளியைச் சேர்ந்தாள். யோன் தன்தமையனுடைய பிள்ளைகளை அரசராக்க முயன்றான். மைக்கல் VII ஒரு கோழையன். படைத்தலைவர் பகைத்தெழ, அரசுதுறந்தான். அவன்மகன் யோன் கமனஸ் என்பானுக்கு மூன்றுமைந்தருண்டு. அம்மூவருள் அலெச்சியஸ் என்னும் இளையகுமாரன் சிறந்துவிளங்கினான். அவன் கி. பி. 1081 தொடங்கி 37 ஆண்டு செங்கோ

லோச்சினன். துருக்கரோடு பொருது நாடுகள் பலவற்றைக் கைப் பற்றினான். அவனுடைய மக்கள் மூவர் அலெச்சியஸ், யோன், ஐசாக்கு என்பவர் அரசாராயினர். யோனுடையமகன் மைக்கல் வேந்தனாகித் துருக்கரொடு பொருதான். அவனுடையமகன் அலேச்சியஸ் கி.பி.1180-ல் வேந்தனானான். அலெக்சியனுடைய மூத்த மகன் யோன் தந்தையோடு கோபித்துத் துருக்கவேந்தனிடம் அடைக்கலம் புகுந்து வேந்தனுடையமகளை மணந்தான். இளைய குமாரன் அந்துரோனிக்கஸ் வெற்றிவேற்றடக்கையனாயினும், துருக்க வேடுவர் கையில் ஒருமுறை சிக்கினன். பின்னர் தியோடோருவின் சகோதரி யூடோசியாவைக் காதலித்தான். தலைமைப்பதவியைப் பெறுதற்குச் சர்மானியரிடம் துணைகேட்டான். வேந்தன் மனுவல் இதையறிந்து அவனைச் சிறையிட்டான். அவன் தன் காதலியின் உதவியால் சிறையினின்றுந் தப்பியோடி, ருஷியா போலந்து அங்கேரி முதலிய நாடுகளில் அலைந்து திரிந்தானாக, மனுவல் இரங்கி அவனை ஒரு படைத்தலைவனாக்கினான். தலைவி மேரியாவின் தங்கை பிலிப்பாவை அந்துரோனிக்கஸ் காதலித்தான். இக்காதலால் வேந்தன் மனுவலின் பகைமையைத் தேடிப் பெற்றான். பின்பு எருசெலம்கோயிலுக்கு யாத்திரைசெய்தான். அங்கு ஒரு அரச குமரியோடு கூடினன். பின்பு மனுவலின்கையில் அகப்பட்டு மன்னிப்புவேண்டினான். கி. பி. 1183-ல் அரசுகட்டிலேறி மனுவலின் பிள்ளைகளையும் மனைவியையும் கொன்று கொடுங்கோலோச்சினான். அவன் ஐசாக்கு அங்கேலஸ் என்னும் ஒருவனைக் கொல்லநினைத்தான். ஜனங்கள் அதையுணர்ந்து வேந்தனைச் சிகைகளைந்து தலைகீழாகத் தூக்கினர்.

கத்தோலிக்கர்சமயம்.

கிறிஸ்தவர்கள் யூதமதத்தினைப் பின்பற்றிப் படிமவழிபாட்டைக் கண்டித்தனர். காலக்கிரமத்தில் சிலுவைப்படிவத்தைத் தொழக்கொடங்கினர். பின்னர் சமயகுரவரின் மயிர், தோல்,

பல் முதலியவற்றை ஞாபகச்சின்னங்களாக வணங்கினர். முழந்தாளிட்டு வணங்கவும் சாம்பிராணித்தூபம் காட்டவும் தொடங்கினர். ஆறும் நூற்றாண்டில் படிமவழிபாடு யாண்டும் நிறுவப்பட்டது. கி. பி. 726-ல் வேந்தன் லீயோ III படிமவழிபாட்டைக் கண்டித்தனன். உரோமகத்தோலிக்ககுரு கிரேக்கரிபடிமவழிபாட்டை நாட்ட முயன்றனன். உரோமாபுரத்திற்கூடிய கத்தோலிக்கசங்கம் படிமவழிபாட்டை நிலைநாட்டிற்று. எட்டாம்நூற்றாண்டில் சர்மானியப் பறங்கிவேந்தன் சார்ளிமேன் கல்லியர்நாட்டையும் வடஇத்தாலிய நாட்டையும் ஆண்டான். அவன் உரோமாபுரத்தைக் கத்தோலிக்க குருமாருடைய தலைவனிடம் ஒப்புவித்தான். அதன்பின் சர்மாணியாவேந்தர்க்கு கத்தோலிக்கமுதற்குரு முடிசூட்டுதல் வழக்கம். முதற்குரு சுவர்க்கமடைந்தால் குருமார்கூடி வேறோர் முதற்குருவைத் தெரிதல் வழக்கமாயினும், தெரியப்பட்டோன் முதற்குருவாக அதிகாரஞ்செலுத்துதற்கு வேந்தனுடைய உத்தரவைப் பெறுதல்வேண்டும். உரோமாபுரத்தில் மசோறியா தியடோறு என்னும் இருசகோதரிகள் அழகியராய்ப்பிறந்து செல்வமுற்றிருந்தனராகையால் பலரைத் தம்வசப்படுத்தி வரைவின்மகளிராயினர். தம்காதலரைக் கத்தோலிக்க முதற்குருவாக்கினர். மசோறியாவின் மகனும் பேரனும் பேரனுடைய பிள்ளையும் கத்தோலிக்க முதற்குருவாகினரென அறியக்கிடக்கின்றது.

[தொடரும்]

ஸ்ரீ:

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[௪0அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

அமங்களப்பொருள்பயக்கும் சொல்வழக்கும் சில இடங்களில் குணமாவது உண்டு.

(1) உதாரணம்

ஸெ௫ாரிஷு ஶ்ஷுஂவடிஸடிஸி௪ாஷா
நு௫க்ருெ௫௪ாஹ௰௫஁ஂ
௫ுெ௫ா ரெ௫ூ௫ாஷஂ விரவுய ரவுயா
ராதிகஂ கா௵ரா௫ி ।
வா௪ாெணு௪ாணு௪ா௵ா௪ாவ நயவி நய
ஷாய தாஂ ெஹரவீஷ௫ா
௰௪வஂ ெஷெவ ஸவா நீஂ வடிதி வரிஜந
வ௫ாஹ௫திஷு௫ாய தாஂவஃ ॥

'நல்லவளான மாரியே! மங்களத்தை உரைப்பாயாக; கிருத்தியையே! ஒரு முகூர்த்தகாலம் இச்சபையில் நிருத்தம் புரிவாயாக; பிருத்தியுவே! நாற்கோணக்கூடத்தை இரத்தினங்களால் நிரப்புவாயாக; காலராத்திரியே! தீபாராதனைப்பாத்திரங்களை அமைத்து வைப்பாயாக; சாமுண்டிதேவியே! வாஸனைபொருந்திய மாலை (முண்டமாலை)யை ஒழுங்குற வைப்பாயாக; பைரவியே! உன் நீண்ட பொறுமையை அடக்குவாயாக;' பரமேசுவரர் பவானீ தேவியைநோக்கிப் பேசிக்கொண்டிருக்கும்போது மேற்கூறியவாறு பரிஜனங்கள் உரையாடுதல் உங்களைக் காப்பதாக.

இங்கேகூறிய மாரி கிருத்தியை முதலிய சொற்கள் அமங்களப் பொருளவாயிருப்பினும், அவை முழுமங்கலப்பொருளாகிய சிவபிரான்சம்பந்தம்பற்றி யுரைக்கப்பெற்றுள்ளனவாதலால் குணமெனப்படும்.

(2) உதாரணம்

𑌸𑌪𑌕𑍍𑌷𑌾 𑌮𑌧𑌰𑌗𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌧𑌿𑌤𑌾𑌶𑌾 𑌮𑌦𑍋𑌦𑍍𑌧𑌤𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌃 ।
𑌨𑌿𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌃 𑌕𑌾𑌲𑌵𑌶𑌾𑌨𑍍𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 ॥

(இது சரற்காலத்தை வருணிக்கின்றது.)

நல்ல இறக்கைகளுடையவையும் இனிமையாகக் கூவுமவையும் எல்லாத்திசைகளையும் அலங்கரிப்பவையும் செருக்கால் அடங்காது செல்பவையும் ஆகிய அன்னங்கள் சரற்காலத்தின் இயல்பால் (மானசதடத்தைவிட்டுப்) பூதலத்தில் வீழ்கின்றன (-வந்திறங்குகின்றன).

இங்கே வேறோர் அமங்களப்பொருள் அமைந்துள்ளது வருமாறு:—

"நல்ல படைகளையுடையவரும், தம் இனத்தாரிடத்து இன்மொழியே வழங்குபவரும், புகழால் எல்லாத்திசைகளையும் கவர்ந்தவரும், இறுமாப்புடன் வினைகளைச்செய்பவரும் ஆகிய திருதராட்டிரன்மைந்தர்கள் தீயகாலத்தின் இயல்பால் பூமியில் வீழ்கின்றனர்."

இவ்வாறுதோன்றும் அமங்களப்பொருள் அன்னத்தைப் பற்றிய நற்பொருளால் மறைபட்டு முதலில் தோன்றுதிருப்பதால் இது குற்றமின்றிக் குணமாயிற்று.

(3) உதாரணம்

𑌕𑍋𑌽𑌹𑌿 𑌕𑍃𑌤𑌂 𑌸𑌂𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌜𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ।
𑌆𑌶𑌾𑌵𑌿𑌶𑌾𑌲𑌿𑌕𑍇𑌷𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

அவள் எந்த நற்காரியத்தை மனத்திற் கொண்டுள்ளாளென்பது துணிய இயலவில்லை; இக்குமாரி என்னை வரைவாள் என்னும் இந்த ஆசை ஒரு பேயேயாகும்.

இங்கே கூறப்பட்டுள்ள 'கலிதோத்த' 'ஸாஹஸோத்ஸாஹ' 'விஸாலிகா' முதலிய சொற்கள் அமங்களப்பொருளை நினைவுறுத்துவனவாயிருப்பினும், உயர்ந்தோரால் வேறு சிறந்தபொருளில் இலக்கணையாக வழங்கப்பட்டுள்ளமையால் இது குற்றமாகாது குணமாயிற்று.

அருவருப்பைப்பயக்கும் பொருளுள்ள சொல்வழக்கும் சில இடங்களில் குணமாவது உண்டு.

(1) உதாரணம்

பத்மாந்யர்காம்ஶுநிஷ்ட்யூதா: பீத்வா பாவகவிப்ருஷ: ।
பூயோ வமந்தீவ முகைருத்கீர்ணாருணரேணுபி: ॥

தாமரைகள், பரிதியின் கிரணங்களால் உமிழப்பட்ட அக்கினியின் துளிகளைப் பருகி, வாய்களினின்று (-பூவினின்று) வெளிக்கிளரும் செந்நிறமாய (மகரந்தப்) பொடிகள் என்னும் வியாஜத்தால் (அவற்றைக்) கக்குகின்றனபோலும்.

இங்கேகூறிய 'நிஷ்ட்யூத' 'உத்கீர்ண' 'வமதி' எனும் சொற்கள் வழக்குநெறியில் அடிப்பட்டும் இலக்கணைநெறியால் வேறு பொருள்களில் வழங்கப்பெற்றுமிருத்தலால் இது அருவருப்பைக் குறிப்பதென்னும் குற்றமன்றிக் குணமாயிற்று.

(2) உதாரணம்

காமிநீகண்டநிஸ்யந்தபிந்துரிந்துரஸம்ஶய: ।
அந்யதா கதமேதஸ்ய ஜகதாஹ்லாதிநீ த்யுதி: ॥

என் காதலியின் கன்னத்தின் வேர்வைத்துளியே சந்திரன் என்பது என்கருத்து. அன்றேல் உலகமுழுமையும் விளக்கும் காந்தி இதற்கு எவ்வாற்றான் இயையக்கூடும்?

இங்கே, காதல்மிகுதற்குக்காரணமாய மடந்தையின்கன்னம், சந்திரன்: இவற்றின் சொரூபபாவனையால் வேறு அருவருக்கும் பொருள் மறைபட்டிருப்பதால் இது குற்றமின்றிக் குணமெனப் படும்.

(3) உதாரணம்

விவஹிபாரஶநாவஹுஃ வஷாஶாஷாஷயாபிணஃ।
ஸுஹவவஹ்ஷி நா யாஷி தி஫ஜவொநணுகாஜ௨லெ௨॥

இவர்கள், முஞ்சம் என்னும் புல்லாலாகிய அரைநாணுடைய வரும் புரசந்தண்டத்தைத் தரித்தவரும் பிரம்மதேஜஸ் உடைய வருமான அந்தணச்சிறுவர்கள்.

இங்கேகூறிய 'விவஹிய' 'வஷாஶ' 'ஸுஹவவஹ்ஷ' 'வொநணு' என்னும் சொற்கள் அருவருக்கும் வேறுபொருள்களை நினைவுறுத்துவனவாயிருப்பினும் ஈண்டு அப்பொருளில் வழங்காது வேறு சிறந்தபொருளுக்காயிருந்தலாற் குற்றமன்றிக் குணமாயின.

இவ்வாறே வேறுபலவும் கண்டுகொள்ளத்தகும்.

கிஂவிஷாஶுய ஷஂவநாஷெக ஶொஹாவொயவி।
காஷாவிஜொவநநூஷஂ ஶ்ரீவெஷிவாஂஜநஃ॥ ௧௦௬

வழுவாயுள்ள வழக்கும் பற்றுக்கோட்டின் இயல்பால் குண மாவதுண்டு. எவ்வாறெனில், அழகிய பெண்ணின் கண்ணில் தீட்டப்பட்ட கருப்பான மையும் அழகிய கண்ணின்சார்பால் சோபையை அடைவதுபோல.

உதாரணம்:—

ஸஜெ வெஹ்ா தவ்ரு ஷதவாஞநஷக
கூ ஹிரகண தஂகண
ஸூாயவெஹ்ஂவிதஷஹிரிஷஹிஷணாவெ
ஶாவொஷயதஂவாரு।

வீதஸூஜிபத்ராக்ருஷ்டவேந
ஸ்தூாஸூாரவொரொாஜஸ
ஜூ்ராரொாஜூஸநஹாரரொஹாரவவவா
உப்ரொபொாத்தம் யாவதி ॥

(இவள்) நரம்புகளால் பிணிக்கப்பட்ட பெருங்கபாலங்களாலான கங்கணங்களும் (அவ்வாறு சமைந்த) பிற அணிகளுமாயவற்றின் சத்தத்தால் ஆகாசத்தைப் பேரொலிகொண்டதாகச் செய்கிறாள்; பருகிக் கக்கின உதிரத்தால் சேறுகொண்டனவாயும் உட்குவரத் தோன்றுவனவாயும் அசைவனவாயுமுள்ள பெருங்கொங்கைகளுடன் செருக்குற்று ஓடி(வரு)கிறாள்.

இவ்வாறு கூறுதலால் பெரிதும் அருவருப்பே தோன்றுவதாயிருப்பினும், இங்கே காட்ட எடுத்துக்கொண்டது இளிவரற் சுவையேயாதலால், சொற்கள் அதற்கேற்ப அமைந்துள்ளனவாதலின் இது குற்றமன்றிக் குணமாயிற்று.

ஸந்நிவேசவசாத்கிஞ்சி அசாருத்வேபி சோபதே ।
நீலம் பஞ்சமசாஸ்த்ரோரஹமாஸ்வ ஸுஜாதிவ ॥ ௧௦௭ ॥

பூமாலையின் இடையே வைத்துத் தொடுக்கப்பட்ட நீலநிறமுள்ள பச்சிலைபோல, சற்று ஒவ்வாதனவாயுள்ளவையும் அமைப்பின் பெருமையால் மிகவும் அழகுவாய்ந்துவிளங்கும்.

உதாரணம்:—

கம்பேது: கஞ்சுகம் ஹ்ருதிஸாரா:
ஸ்ரீஹஸ்தாக்ரோத்தய
வ்யக்தம் ஸஹ்ய க: விநஹ்ய ஸஹஸா
ஹ்ருத்வர்ணிக ஸஜ: ।
ஸதா: சோணிதபங்க பங்கஜஷ:
ஸம்ஹ்ருத்ய காஞ்சே: விவ
த்ருஷ்டிஷேஹஸாரா: கவாடவக்ஷோகை:
வீதா: விஸாஹம் நா: ॥

களிப்படைந்த பேய்மகளிர், நரம்புகளாலான மங்கலகங்கணங்களணிந்துகொண்டும், மடந்தையரின் கைகளாகிய தாமரைமலர்களைத் தலையணியாக அணிந்துகொண்டும், ஹிருதயத்தசையாகிய தாமரைமலர்களால் தொடுக்கப்பெற்ற மாலைகளை அணிந்துகொண்டும், ரத்தக்குழம்பையே குங்குமப்பொட்டாக இட்டுக்கொண்டும் என்புகளின் கசிவாகிய கள்ளை மண்டையோடாகிய பாண்டங்களால் (எடுத்து) தம் கணவருடன் குடிக்கின்றனர்.

(இச்சுலோகம் பவபூதி என்னும் கவியால் இயற்றப்பெற்ற மாலதீமாதவம் என்னும் நாடகத்தில் இடுகாட்டை வருணிக்குமிடத்தே காணப்படுவது.)

இவ்வாறு அருவருப்பான நிகழ்ச்சியை வருணிக்குமிடத்தே சிருங்காரச் சுவையும் விரவுமாறு கூறப்பட்ட தென்னையெனின்,— 'சிருங்காரச்சுவையில் ஈடுபட்டவர்கள் உலகமுழுமையும் அச்சுவையொடுபட்டதாகவே காண்பார்கள்' என்னும் நியாயத்தைப் பின்பற்றி, அந்நாடகத்தின் தலைவனாகிய மாதவனென்பான் தான் இடுகாட்டை வருணிக்குமிடத்திலும் அச்சுவையையொட்டியே கூறினானாகக் கவி கூறினானென்க.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B A., B L.

மதுரை.